**ஜனவரி – 27**

# TNPSC துளிகள்

- 20வது டாக்கா சர்வதேச திரைப்பட விழாவில் ஆசிய திரைப்படங்களுக்கான போட்டிப் பிரிவில் இந்தியாவின் கூழாங்கல் திரைப்படம் சிறந்த திரைப்படத்திற்கான விருதை வென்றது.
  - இந்தத் திரைப்படத்தினை P.S. வினோத்ராஜ் என்பவர் இயக்கியுள்ளார்.
- இந்தியாவில் வாழும் 18 வயதுக்குட்பட்ட பதின்ம வயதினரில் 67 சதவீதத்தினரும், 58 சதவீத இளையோர்களும் பருவநிலை மாற்றத்தை ஓர் உலகளாவிய அவசர நிலை என்று கருதுகின்றனர்.
  - இது 2021 ஆம் ஆண்டிற்கான G20 மக்களின் பருவநிலை வாக்கு என்ற ஒரு அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.
- மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சகத்தின் கீழ் இயங்கும் பொது சேவை மையம் ஆனது சமீபத்தில் யோக்யதா என்ற ஒரு கைபேசிச் செயலியை அறிமுகப் படுத்தியது.
  - கிராமப்புறங்களில் உள்ள இளைஞர்களுக்குத் திறன் மேம்பாட்டு வாய்ப்புகளை வழங்குவதே இந்தச் செயலியின் நோக்கமாகும்.
- ரத்தன் டாடாவுக்கு அசாம் மாநில அரசு தனது உயரிய விருதான ‘அசாம் பைபவ்’ என்ற விருதை வழங்கியது.
  - இது அசாம் மாநிலத்தின் ஒரு உயரியக் குடிமை விருது ஆகும்.
- புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட தனது செயற்கை நுண்ணறிவு மீக்கணினியானது 2022 ஆம் ஆண்டின் மத்தியில் உலகின் அதிவேக கணினியாகத் திகழும் என மெட்டா நிறுவனம் தெரிவித்துள்ளது.
  - மெட்டா நிறுவனம் ஃபேஸ்புக்கின் மூல நிறுவனம் ஆகும்.
- இமாச்சலப் பிரதேசத்தில் நடைபெற்ற 9வது தேசிய மகளிர் பனிக்கட்டி மைதான ஹாக்கி சாம்பியன்ஷிப் போட்டியில் லடாக்கை சேர்ந்த மகளிர் அணி வென்றுள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## நொய்டா சர்வதேச திரைப்பட விழா - ஜெய் பீம்





- இயக்குனர் த.சே.ஞானவேல் என்பவரின் இயக்கத்தில் முன்னணி நடிகர்களான சூர்யா, லிஜோமோல் ஜோஸ் மற்றும் மணிகண்டன் ஆகியோர் நடித்துள்ள ‘ஜெய் பீம்’ எனும் திரைப்படமானது ஒன்பதாவது நொய்டா சர்வதேசத் திரைப்பட விழாவில் (2022) மூன்று விருதுகளை வென்றுள்ளது.

- இந்தப் படம் சூர்யாவுக்கு சிறந்த நடிகருக்கான விருதையும், லிஜோமோல் ஜோஸுக்கு சிறந்த நடிகைக்கான விருதையும் பெற்றுத் தந்தது.
- சிறந்த படத்திற்கான விருதையும் இத்திரைப்படம் பெற்றது.

# தேசியச் செய்திகள்

## ஸ்விக்கி டெகாகார்ன் நிறுவனமாக மாறுகிறது

- சொத்து மேலாண்மை நிறுவனமான இன்வெஸ்கோ தலைமையிலான 700 மில்லியன் டாலர் மதிப்பிலான ஒரு நிதி ஒப்பந்தத்தில் ஸ்விகி நிறுவனம் கையெழுத்திட்டுள்ளது.
- இதன் மூலம், ஸ்விக்கியின் மொத்த மதிப்பு தற்போது 10.7 பில்லியன் டாலர்களை எட்டி உள்ள நிலையில் இந்த நிறுவனம் தற்போது ஒரு டெகாகார்ன் (decacorn) நிறுவனம் என்ற நிலையினை அடைந்துள்ளது.
- ஒரு டெகாகார்ன் நிறுவனம் என்பது 10 பில்லியன் டாலருக்கும் அதிகமான அளவிலான மதிப்பீட்டைக் கொண்ட ஒரு புத்தாக்க நிறுவனமாகும்.




## நறுமணப் பொருட்கள் பரிமாற்றத் தளம்

- இந்திய நறுமணப் பொருட்கள் வாரியமானது, சமீபத்தில் நறுமணப் பொருட்கள் (மசாலாப் பொருட்கள்) பரிமாற்றத் தளத்தினை அறிமுகப்படுத்தியது.
- இந்த தளமானது, இந்திய மசாலாப் பொருட்கள் ஏற்றுமதி நிறுவனங்களுக்கும் உலகம் எங்கிலும் உள்ள கொள்முதல் நிறுவனங்களுக்கும் இடையிலான ஒரு சந்திப்பு மையமாகச் செயல்படும்.
- இது நாட்டிலேயே இது போன்ற முதல் வகை தளமாகும்.
- இந்தத் தளத்தினை மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் தொடங்கி உள்ளது.


- மொத்த தோட்டக்கலை ஏற்றுமதியில் மசாலாப் பொருட்களின் பங்கு 41 சதவீதம் ஆகும்.
- இந்திய வேளாண் சரக்குப் பொருட்களில் மசாலாப் பொருட்கள் நான்காவது இடத்தில் உள்ளன.
- முதல் மூன்று இடங்களில் கடல் பொருட்கள், பாஸ்மதி ரகம் சாராத அரிசி மற்றும் பாஸ்மதி அரிசி ஆகியவை உள்ளன.
- உலகிலேயே மசாலாப் பொருட்களின் மீதான மிகப்பெரிய உற்பத்தியாளர், நுகர்வோர் மற்றும் ஏற்றுமதியாளர் நாடாக இந்தியா திகழ்கிறது.

## இந்தியா மற்றும் இஸ்ரேல் - தூதரக உறவுகளின் 30வது ஆண்டு விழா

- இந்தியா மற்றும் இஸ்ரேல் ஆகிய இரு நாடுகளுக்கும் இடையே தூதரக உறவுகள் நிறுவப் பட்டு 30 ஆண்டுகள் நிறைவடைந்ததைக் குறிக்கும் வகையில் இரு நாடுகளும் நினைவு முத்திரை ஒன்றை வெளியிட்டுள்ளன.
- இந்த முத்திரையில், தாவீத் நட்சத்திரம் மற்றும் அசோகச் சக்கரம் ஆகியவையும் இரு தரப்பு உறவுகளின் 30வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் 30 என்ற எண்ணும் இடம் பெற்றுள்ளன.
- 1992 ஆம் ஆண்டு ஜனவரி 29 ஆம் தேதியன்று இஸ்ரேலும் இந்தியாவும் தங்களது தூதரக உறவுகளை நிறுவின.




## ஓமிக்ரான் சோதனைக் கருவி – ஓம்




- மத்திய அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிச் சபையின் மத்திய மருந்து ஆராய்ச்சி நிறுவனமானது, உள்நாட்டிலேயே வடிவமைக்கப்பட்ட 'ஓம்' என்ற ஒரு ஆர்டி - பிசிஆர் சார்ந்த தொற்று கண்டறியும் ஒரு கருவியை உருவாக்கியுள்ளது.

- இது கொரோனா வைரஸின் ஓமிக்ரான் திரிபினைக் கண்டறிவதற்கான கருவியாகும்.
- ஓர் அரசு நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட முதல் கருவி இதுவாகும்.
- ஓமிக்ரானின் திரிபினை மட்டும் பிரத்யேகமாக கண்டறிவதற்காக உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட மூன்றாவது கருவியும் இதுவேயாகும்.

### வேளாண்மையில் ஆளில்லா விமானங்களைப் பயன்படுத்தச் செய்வதற்கான மானியம்





- மத்திய வேளாண்துறை அமைச்சகம் ஆனது, வேளாண் இயந்திர மயமாக்கலின் மீதான துணை திட்டத்தின் வழிகாட்டுதல்களைத் திருத்தி அமைந்துள்ளது.
- இது வேளாண்மையை இயந்திரமயமாக்குவதற்காக ஆளில்லா விமானங்களை வாங்குவதற்கு 2023 ஆம் ஆண்டின் மார்ச் மாதம் வரையில் 40 முதல் 100 சதவீதம் வரை மானியத்தை வழங்கும்.
- இந்தத் திருத்தத்திற்குப் பிறகு, ஆளில்லா விமானங்களை வாங்குவதற்கு என்று ஆகும் செலவில் 100 சதவீதத்தை மானியமாக அல்லது ரூ 10 லட்சம், இவற்றுள் எது குறைவோ அது வழங்கப்படலாம்.

## சுற்றுச்சூழல் செய்திகள்

### நஜாப்கர் ஜீல்

- நஜாப்கர் ஜீல் என்பது இரு எல்லைகளுக்கிடையே அமைந்துள்ள ஓர் ஈரநிலம் ஆகும்.
- இது டெல்லி மற்றும் ஹரியானா ஆகியவற்றின் எல்லையில் அமைந்துள்ளது.
- நஜாப்கர் ஏரி டெல்லியின் கட்டுப்பாட்டில் உள்ளது.
- தேசியப் பசுமைத் தீர்ப்பாயமானது, ஹரியானா மற்றும் டெல்லி அரசுகள் தயாரித்த சுற்றுச்சூழல் மேலாண்மைத் திட்டங்களைச் செயல்படுத்துமாறு இரு அரசுகளுக்கும் சமீபத்தில் உத்தரவிட்டது.
- இந்தத் திட்டமானது நஜாப்கர் ஜீல் ஈரநிலத்தினைப் புணரமைப்பதை நோக்கமாகக்

கொண்டுள்ளது.




## பெருவில் சுற்றுச்சூழல் அவசரநிலை




- பெரு ஒரு தென் அமெரிக்க நாடாகும்.
- எண்ணெய்க் கசிவின் காரணமாக பெரு நாட்டில் சமீபத்தில் ஒரு சுற்றுச்சூழல் அவசர நிலை அறிவிக்கப்பட்டது.
- இந்த அவசரநிலையானது 90 நாட்கள் வரை நீடிக்கும்.
- சுமார் ஆறாயிரம் பீப்பாய்கள் அடங்கிய எண்ணெய் பசிபிக் பெருங்கடலில் கலந்தது.
- ரெப்சோல் எனும் ஸ்பெயின் நாட்டு எரிசக்தி நிறுவனத்தின் கொள்கலன் கப்பலானது, பெருவில் உள்ள வந்தினல்லா சுத்திகரிப்பு (Vantinalla refinery) ஆலைக்கு எண்ணெய்ப் பீப்பாய்களை ஏற்றிச் சென்றது.
- இக்கப்பலின் பெயர் "மேரே டோரிகம்" என்பதாகும்.
- இது ஓர் இத்தாலியக் கப்பலாகும்.
- கடலுக்கு அடியில் உள்ள டோங்கா எரிமலை வெடித்ததன் காரணமாக எண்ணெய்க்

கசிவு ஏற்பட்டது.

# மாநிலச் செய்திகள்

## மங்களூருவில் நெகிழிப் பூங்கா

- கர்நாடக மாநிலத்தின் மங்களூருவில் உள்ள கஞ்சிமட் என்னுமிடத்தில் ஒரு நெகிழிப் பூங்காவினை அமைக்க மத்திய அரசு சமீபத்தில் ஒப்புதல் அளித்துள்ளது.
- நெகிழிப் பூங்காக்கள் என்வைது தொழில்துறை மண்டலங்கள் ஆகும்.
- இயந்திர பொருட்கள் மற்றும் நெகிழி உற்பத்தி, நெகிழி மறுசுழற்சி மற்றும் நெகிழியைப் பதப்படுத்தும் நிறுவனங்களின் வளர்ச்சியில் அவை ஒரு முக்கியப் பங்கு வகிக்கின்றன.
- தமிழ்நாட்டின் திருவள்ளூர் மாவட்டத்தில் வோயல்லூர் என்னுமிடத்தில் ஒரு நெகிழிப் பூங்கா அமைந்துள்ளது.

# விளையாட்டுச் செய்திகள்

## AFC மகளிர் ஆசியக் கோப்பை 2022




- தற்போது நடைபெற்று வரும் 2022 ஆம் ஆண்டின் AFC மகளிர் ஆசியக் கோப்பைப் போட்டியிலிருந்து இந்திய மகளிர் கால்பந்து அணி விலகியுள்ளது.
- பல வீராங்கனைங்களுக்கு கோவிட்-19 தொற்று இருப்பது கண்டறியப் பட்டதை அடுத்து இந்த முடிவானது மேற்கொள்ளப்பட்டது.
- தற்போது நடைபெற்று வரும் இந்தக் கால்பந்துப் போட்டியை இந்தியா நடத்துகிறது.

## சர்வதேச கிரிக்கெட் சபை விருதுகள் 2021

- 17வது ஐசிசி விருதுகளின் (2021) வெற்றியாளர்களை சர்வதேச கிரிக்கெட் சபையானது (ஐசிசி) அறிவித்துள்ளது.
- இது ஜனவரி 01, 2021 முதல் டிசம்பர் 31, 2021 வரையிலான முந்தைய 12 மாதங்களில் சிறந்து விளங்கிய சர்வதேச கிரிக்கெட் வீரர்களை கௌரவிப்பதற்கான விருதாகும்.
- இந்த ஆண்டில் அந்தந்த நாடுகளின் தேசிய அணிக்காக குறிப்பிடத்தக்க வகையில் வீரர்கள் ஆற்றிய சிறந்த பங்களிப்பிற்கான ஒரு அங்கீகாரத்தினை இந்த விருதானது

வழங்குகிறது.

| Category | Winners |
|---|---|
| Rachael Heyhoe Flint Trophy for ICC Women's Cricketer of the Year | Smriti Mandhana (India) |
| Sir Garfield Sobers Trophy for ICC Men's Cricketer of the Year | Shaheen Afridi (Pakistan) |
| ICC Umpire of the Year | Marais Erasmus |
| ICC Men's T20I Cricketer of the Year | Mohammad Rizwan (Pakistan) |
| ICC Women's T20I Cricketer of the Year | Tammy Beaumont (England) |
| ICC Emerging Men's Cricketer of the Year | Janneman Malan (South Africa) |
| ICC Emerging Women's Cricketer of the Year | Fatima Sana (Pakistan) |
| ICC Men's Associate Cricketer of the Year | Zeeshan Maqsood (Oman) |
| ICC Women's Associate Cricketer of the Year | Andrea-Mae Zepeda (Austria) |
| ICC Men's ODI Cricketer of the Year | Babar Azam (Pakistan) |
| ICC Women's ODI Cricketer of the Year | Lizelle Lee (South Africa) |
| ICC Men's Test Cricketer of the Year | Joe Root (England) |

# முக்கிய தினங்கள்

## தேசியச் சுற்றுலா தினம் - ஜனவரி 25




- நாட்டின் பொருளாதாரத்தில் சுற்றுலாவின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்திய அரசாங்கம் இத்தினத்தினை நிறுவியது.
- சுற்றுலாவின் முக்கியத்துவம் மற்றும் அதன் சமூக, அரசியல், நிதி மற்றும் கலாச்சார மதிப்பு குறித்து உலகச் சமூகத்தினரிடையே விழிப்புணர்வை வளர்ப்பதற்காக இந்த தினமானது அனுசரிக்கப்படுகிறது.

## தேசிய வாக்காளர் தினம் - ஜனவரி 25

- அரசியல் செயல்பாட்டில் அதிக இளம் வாக்காளர்களை பங்கேற்பதற்கு ஊக்குவிக்கச்

செய்வதற்காக இந்தியாவில் இத்தினமானது அனுசரிக்கப்படுகிறது.

- இந்தியத் தேர்தல் ஆணையமானது இந்த ஆண்டு 12வது தேசிய வாக்காளர் தினத்தைக் கொண்டாடுகிறது.
- இந்த ஆண்டின் இந்தத் தினத்திற்கான கருத்துரு, 'தேர்தல்களை உள்ளார்ந்ததாகவும், அணுகக் கூடியதாகவும், பங்கேற்பு மிக்கதாகவும் மாற்றுதல்' (Making Elections Inclusive, Accessible and Participative) என்பதாகும்.
- 2011 ஆம் ஆண்டு முதல், இந்தியத் தேர்தல் ஆணையம் (ஜனவரி 25, 1950) நிறுவப்பட்ட தினத்தைக் குறிக்கும் வகையில் ஒவ்வோர் ஆண்டும் தேசிய வாக்காளர் தினம் கொண்டாடப் படுகிறது.




## சர்வதேச சுங்க தினம் - ஜனவரி 26




- உலகச் சுங்க அமைப்பின் தொடக்க அமர்வை நினைவு கூரும் வகையில் இந்தத் தினமானது அனுசரிக்கப்படுகிறது.
- இந்த அமர்வானது 1953 ஆம் ஆண்டில் இதே தேதியில் நடைபெற்றது.
- இந்த தினமானது சுங்க அதிகாரிகளின் முக்கியத்துவம் மற்றும் எல்லைகளைத் தாண்டிய சரக்குப் போக்குவரத்தில் அவர்களின் பங்கு பற்றி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகிறது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★